கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2015/2016
(ஒக்டோபர் 2018)

# FAS 4233 Right, Laws, Conventions of Art & Culture

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் என மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

## பகுதி – I

01. (அ) மரபுரிமைகள் என்றால் என்னவென்று கருதுகின்றீர் - விளக்குக.
(10 புள்ளிகள்)
(ஆ) இன்றைய சூழலில் மரபுரிமைகளின் தேவைப்பாடுகள் குறித்து மதிப்பிடுக.
(15 புள்ளிகள்)

02. (அ) நவீன உலகமயமாக்கம் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)
(ஆ) உலகமயமாக்கம் மரபுரிமைகள் மீது செலுத்தும் தாக்கங்கள் குறித்து விவாதிக்குக.
(15 புள்ளிகள்)

03. (அ) நவீனமயமாக்கம் என்றால் என்ன? (05 புள்ளிகள்)
(ஆ) நவீன அபிவிருத்தி என்றால் என்ன? (05 புள்ளிகள்)
(இ) நவீனமயமாக்கமும் அபிவிருத்தியும் உள்ளூர் மரபுரிமைகள் மீது நிகழ்த்தும் தாக்கங்களை உதாரணங்கள் ஊடாக எடுத்துக்காட்டுக.
(15 புள்ளிகள்)

## பகுதி – II

04. சுயாதீனமான சமூகங்களை உருவாக்குவதில் உள்ளூர் மரபுரிமைகள் பெறும் இடத்தினை காலனித்துவ நீக்கக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.
(25 புள்ளிகள்)

05. நவகாலனீயச் சூழலில் பூர்வகுடி மக்களது சமூக பண்பாட்டு உரிமைகள் எதிர்கொண்ட சவால்கள், அவற்றை எதிர்கொள்ள பூர்வகுடி மக்கள் மேற்கொண்டுவரும் முன்னெடுப்புக்கள் பற்றி அறியத் தருக.
(25 புள்ளிகள்)

06. "சமூக வழக்காறுகளில் கொண்ட நம்பிக்கைகளினடியாக ஒழுங்குக் கட்டமைப்புக்கள் பேணப்படுகின்றன"
"காலனீயம் அறிமுகப்படுத்திய சட்டங்களும் அதுசார் நிறுவனங்களும் ஒழுங்கையும் சட்டத்தையும் பேணுபவையாக உள்ளன" - இவை குறித்த உமது மனப்பதிவுகளை சிபார்சு செய்க.
(25 புள்ளிகள்)

*****